**செய்தி வெளியீடு எண்: 299** **நாள்: 04.05.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (4.5.2018) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் திருநெல்வேலி மாநகர் – வ.உ.சி. நகர் திட்டப் பகுதியில் 23 கோடியே 18 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 432 அடுக்குமாடி குடியிருப்புகளை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், ஈரோடு மாநகர் – முத்தம்பாளையம், பாரதி நகர் திட்டப் பகுதியில் 21 கோடியே 27 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 256 அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்தார்கள்.

மக்கள் தொகைப் பெருக்கம் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் முக்கியமான ஒன்றாக விளங்கும் உறைவிடத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும், குறிப்பாக, ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் நோக்கிலும், நகர்ப்புற பகுதிகளில் தேவைக்கேற்ப குடியிருப்பு மற்றும் வீட்டு வசதி உருவாக்கம் செய்யும் பல்வேறு திட்டங்களையும், தமிழகத்தின் நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் இன்றி வாழும் நலிவுற்ற ஏழை எளிய மக்களின் வாழ்வாதார நிலையினை மேம்படுத்தவும், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலம் பல்வேறு குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், திருநெல்வேலி மாநகரில் கீழத்தெரு, அன்னை இந்திராநகர், செந்தமிழ் நகர், வாகைகுளம், குமரன் தெரு, தேவிபுரம் மற்றும் சர்தார்புரம் ஆகிய குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு திருநெல்வேலி மாநகருக்குட்பட்ட வ.உ.சி. நகர் திட்டப் பகுதியில் 23 கோடியே 18 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 432 அடுக்குமாடி குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மேலும், ஈரோடு மாநகரில் பெரும்பள்ளம், ஓடைப்பகுதி, குளித்துப்பண்ணை மற்றும் அசோகபுரி ஆகிய குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதியின்றி வாழ்ந்து வரும்

குடும்பங்களுக்கு ஈரோடு மாநகர் – முத்தம்பாளையம், பாரதி நகர் திட்டப் பகுதியில் 21 கோடியே 27 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 256 அடுக்குமாடி குடியிருப்புகள்;

என மொத்தம் 44 கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள 688 அடுக்குமாடிக் குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி வி.எம். ராஜலட்சுமி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு.ச.கிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய முதன்மைச் செயலாளர் / மேலாண்மை இயக்குநர் திரு.ஷம்பு கல்லோலிகர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 4.5.2018